ஓம் சரவணஜோதியே நமோ நம

ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்

24.09.2026

1. நவகோடி ஞானிகள் அருளும் குடில்
ஞானபண்டிதனார் அரசாட்சி புரிகின்ற
அவணி காக்கும் பிரணவக் குடில் தன்னை
அணுகுவார்க்கு வாழ்வில் தேற்றமே எனக் கூறி

2. கூறியே ஆறுமுக அரங்கன் யான்
குறைவிலா பராபவ நங்கை திங்கள்
வரமாக முதல் குருவார அருளாசியை
வழங்குவேன் உலகோர் நன்மை அடைய

3. நன்மை தரும் ஞானிகள் பூசையோடு
ஞானமோடு ஆரோக்கியம் தருகின்ற
அன்னமுமே பிரணவக் குடில் அருளமுதோடு
ஆற்றல் மிக்க தீட்சை பலமும் ஏற்க

4. ஏற்கவே நல்வினைகள் பெருகி
எதிர்வினை செய்வினை தீவினைகள் விலகி
அற்புதமான வளர்ச்சி மாற்றங்கள்
அணுகுவார் அனைவரும் அடைவர்

5. அடையவே தன் பிறவி நோக்கம்
அறிவதுடன் அறிவுத் தெளிவு கூடி
தடையென்பதே ஞானவழி இல்லா
தகர்த்து மேன் மேலும் உயர்வர்

6. உயர்வுதரும் ஞானிகள் மார்க்கமே
உண்மை மார்க்கம் எனத் தேறி
தயவுடன் கூடிய தருமநெறி தன்னை
தன் வாழ்க்கை கடமையாக ஏற்று

7. ஏற்றுமே பிரணவக்குடில் தருமத்தில்
இடைவிடாப் பொருளுதவி செய்து
ஆற்றல்பட எங்கும் தருமபலம்
அமைந்திட பெருகிட துணை நிற்பர்

8. நிற்கவே உலகம் எங்கிலுமே
நீதி நெறி போல அரங்கனென்

அற்புத சன்மார்க்க சைவ நெறி
ஆற்றல் மிக்க தருமநெறி பரவிட

9. பரவிட பேருலகம் புண்ணிய பலமாகி
பாதுகாப்பு மிகுதி கண்டடையும்
பிரளயம் பேரிடர் இயற்கை சீற்றமென
பேரழிவு யுத்தம் கலகம் வகை கண்டிடா

10. கண்டிடா அமைதி நீர்நில வளம்
கருணை தயவுமிக்க ஆளுமையாக
தொண்டுள்ள மிக்க சமூக மாற்றமாக
தெய்வீகம் நிறைந்த ஞானபூமியாக

11. ஆகவே மாற்றம் பல கண்டு
அகிலம் சகல வளமும் காணும்
மகான்கள் வெளிப்பட்டு அருள
முருகப்பெருமானே ஆளும் உலகமாகும்
அரங்கனென் குருவார அருளாசி முற்றே.

—சுபம்—

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி